# சூரியன் இயக்கம்

சூரியன் இயக்கத்தின் பேரில் கணக்கிடும் முறையில் ஓர் ஆண்டை இரண்டாகப் பிரிக்கின்றனர். டிசம்பர் 21 ஆம் தேதிமுதல் ஜூன் 20 வரை ஓர் ஆறு மாதக் காலம்,. ஜூன் 21 ஆம் தேதி முதல் டிசம்பர் 20 ஆம் தேதிவரை ஓர் ஆறுமாதக் காலம். சூரியன் இயக்கம் தென்செலவை (தட்சிணாயனம்) டிசம்பர் 20 ஆம் தேதி முடித்து விட்டு டிசம்பர் 21 ஆம் தேதி வடசெலவை (உத்தராயனம்) கொள்வதாக இருக்கும். அதேபோல் வடசெலவை (உத்திராயனம்) ஜூன் 20 ஆம் தேதி முடித்து விட்டு ஜூன் 21 ஆம் தேதி தென்செலவைக் கொள்வதாக இருக்கும். டிசம்பர் 21 ஆம் தேதியில் இரவு நீண்டதாக இருக்கும்

சூரியன் நில நடுக்கோட்டினைக் கடந்து செல்லும் நாள்கள் (மார்ச்சு 21, செப்டம்பர் 23 ஆம் தேதிகள்).. அந்த இரு நாள்களிலும் இரவும் பகலும் சரி சமமாக இருக்கும் (equinox). படகு மாதம் நல்லாநி மார்ச்சு 21ஆம் தேதியை ஒட்டி வரும் அமாவாசைக்கு அடுத்தநாள் பிறக்கும்.